සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය

සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උෟණ උපයෝජ්‍ය රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

நிதி அமைச்சு

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழ்மைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

Ministry of Finance

State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development


| මගේ අංකය / எனது இல / My No | ඔබේ අංකය / உமது இல / Your No | දිනය / திகதி / Date |
|---|---|---|
| DSD/HO/05/MF/01/சுற்றறிக்கை | | 2021.03.25 |

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை 2021/08

அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்கள்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள்,
நிறைவேற்று குழு/ கட்டுப்பாட்டு சபை தலைவர்களுக்கும்,

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் / வங்கிச் சங்கங்களில் பயன்படுத்தப்படும் கணினி மென்பொருளின் பொருட்டான சேவை கட்டணத்தை பெற்றுக் கொள்ளல்.</u>**

தற்போது காணப்படும் சவால்களுக்கு மத்தியிலும் வங்கி கணனிமயப்படுத்தல் விடயம் தொடர்பாக இதுவரை அடைந்துள்ள முன்னேற்றங்களுக்கு தாங்கள் உட்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

02. 2021.04.12 ஆம் திகதியளவில் மாவட்டங்களின் சகல வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களிலும் மென்பொருள் நிறுவுதல் நடவடிக்கையினை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவ சபை அலோசனை வழங்கியுள்ளது.

03. மேலும், இதுவரை திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவின் மூலம் மென்பொருள் வழங்கல் மற்றும் தொழில் நுட்ப உதவி வழங்கல் என்பவற்றிற்கு மென்பொருள் வசதி வழங்கும் நிறுவனங்களுக்கு முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் மாதாந்த சேவை வழங்களின் பொருட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. இது முழு வங்கி வலையமைப்புக்குமாக இருந்தாலும் இவ் வேலைகள் தொடர்பாக சில வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் உத்தியோகத்தர்களின் ஆர்வமும், அர்ப்பணிப்பும் போதுமானதாக இல்லை என்பது தெரியவருகின்றது.

04. மென் பொருள் நிறுவி முடிக்கப்பட்ட பின்னர் உரிய சேவையினை வழங்கும் நிறுவனத்திற்கு மென்பொருளை செயற்படுத்திச் செல்வதற்கான சேவை கட்டணம் மற்றும் Server வசதி ஆகிய வற்றுக்கு கைச்சார்த்திடப்படும் ஒப்பந்தத்திற்கு அமைய மாதாந்த சேவைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். இதற்கமைய சகல வங்கிகளும் இச் செலவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

05. இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை இச் சேவை வழங்கும் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யும் பொருட்டு அனைத்து வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களும் 2021 மார்ச் மாதத்தில் இருந்து மாதாந்த சேவைக் கட்டணமாக ரூபா 7000/= குறுநிதி பிரிவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க முகாமைத்துவ சபை இதற்கான அனுமதியினை வழங்கியுள்ளது. இச்சேவைக் கட்டணத்தை வழங்கும் போது கீழ்வருமாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

5.1 அனைத்து சமுர்த்தி வங்கிகளும் தமது மாதாந்த சேவைக் கட்டணத்திற்குரிய காசோலையினை வங்கிச் சங்கத்தின் நடைமுறைக் கணக்கிற்கு வரவு வைக்க கூடிய விதத்தில் காசோலையினை வரைந்து வழங்குதல் வேண்டும். இதற்கான கணக்கு பதிவுகள் கீழ்வருமாறு அமையும்.


1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |
| | | Hot Line :0112-889007 | | | |

செலவுக் கணக்கு- கணினி பராமரிப்பு மென்பொருள் கொள்வனவு மற்றும்
சேவைக் கட்டணக் கணக்கு - பற்று (குறியீடு இலக்கம் - 2140)

நடைமுறைக் கணக்கு - வரவு

5.2 சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் தனது பொதுப்பேரேட்டில் கணினி மென்பொருளின் பொருட்டு சேவை கட்டணம் சேகரித்தல் கணக்கினை (குறியீட்டு இலக்கம் 9315) ஆரம்பித்தல் வேண்டும். சமுர்த்தி வங்கிகள் வழங்கிய காசோலைகள் தேறிய பின்னர் கீழ குறிப்பிடப்படும் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

நடைமுறைக் கணக்கு - பற்று
கணினி மென்பொருளின் பொருட்டான சேவைக் கட்டணம்
சேகரித்தல் கணக்கு - வரவு (குறியீடு இலக்கம் 9315)

5.3 இதற்கு மேலதிகமாக சமுர்த்தி வங்கிச் சங்கங்களினால் தங்களது அதிகார பிரதேசத்துக்கு உட்பட்ட சகல வங்கிகளில் இருந்தும் சேகரிக்கும் சேவைக் கட்டணத்தை மற்றும் தங்களது வங்கிச் சங்கத்திற்குரிய சேவைக் கட்டணத் தொகை என்பவற்றை சேர்த்து அதற்கான காசோலையினை “முகாமையாளர், இலங்கை வங்கி பத்தரமுல்ல சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவு - முதலீட்டு கணக்கு இலக்கம் 3417925 இற்கு வரவு வைக்கக்கூடிய விதத்தில் கீழ் குறிப்பிடப்படும் கணக்கு பதிவுகளை மேற்கொண்டு அனுப்பி வைக்கவும்.

செலவுக் கணக்கு - கணினி பராமரிப்பு மென் பொருள் கொள்வனவு மற்றும்
சேவை கட்டண கணக்கு - பற்று (குறியீடு எண் 6037)
கணினி மென்பொருளின் பொருட்டான சேவைக் கட்டணம் சேகரித்தல் கணக்கு - பற்று (குறியீடு எண் 9315)
நடைமுறை கணக்கு - வரவு

5.4 ஒவ்வொரு மாதமும் முடிவுற்று அடுத்த மாதத்தின் 05 ஆம் திகதிக்கு முன்னர் இக்காசோலைகளை பதிவுத் தபால் மூலம் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு அனுப்பி வைப்பதுடன் காசோலையினை வழங்கிய வங்கிகளின் பெயர்களை உள்ளடக்கி முகப்புக் கடிதத்தினையும் அனுப்பிவைக்கவும்.

5.5 மேலும் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் சேவைக் கட்டணத்தை சேகரித்தல் மற்றும் சேகரித்த சேவைக் கட்டணத்தை வங்கிப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் தொடர்பாக பதிவேடு ஒன்றை செயற்படுத்திச் செல்லுமாறும் வேண்டப்படுகிறீர்கள்.

06. ஒவ்வொரு வங்கியும் இம்மென்பொருளை நிறுவி முடித்த பின்னர் கணக்காய்வுப் பிரிவுகளால் வழங்கப்படும் சான்றிதழின் பிரகாரம் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்திற்கு அமைய கொடுப்பனவுகளை செய்ய ஆலோசனை வழங்கப்படும்.

07. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வசதிகள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளதுடன் தாங்கள் வழங்கும் சேவையினை பாராட்டுகிறேன்.

**R.P.B.திலகசிறி**
**பணிப்பாளர் நாயகம்.**

**பிரதிகள்:-**

1. செயலாளர், சமுர்த்தி,வதிவிடப்பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இரஜாங்க அமைச்சு. -தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர் / மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம் -தகவலுக்காக
3. பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள், சமு.அபி.திணைக்களம் -உ.ந.பொருட்டு
4. பிரதம கணக்காளர், சமு.அபி.திணைக்களம் -உ.ந.பொருட்டு
5. உதவி பணிப்பாளர் - சமுதாய அடிப்படை அமைப்பு, சமு.அபி.திணைக்களம் -உ.ந.பொருட்டு
6. மாவட்ட சமுர்த்தி பணிப்பளர், சமு.அபி.திணைக்களம் -உ.ந.பொருட்டு

Translated by :- I.Aliyar
District Samurdhi Director - Mannar